பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
10 11 2025 7 15
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று அங்கோலா நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார்.

2. இந்தியாவிலிருந்து கொண்டு செல்லப்பட்ட புத்தரின் புனிதச் சின்னங்களுக்கு அளிக்கப்பட்ட சிறப்பான வரவேற்புக்காக பூடான் அரசுக்கும் அந்நாட்டு மக்களுக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.

3. ஹஜ் புனிதப் பயணம் தொடர்பாக சவுதி அரேபியாவுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

4. நாட்டின் வடகிழக்கு மற்றும் இமயமலைப் பகுதிகளில் நகர்ப்புற வளர்ச்சிக்காக ஆயிரம் கோடி ரூபாய் நிதியம் உருவாக்கப்படும் என்று மத்திய இணையமைச்சர் திரு. Tokhan Sahu கூறியுள்ளார்.

5. பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான ஆசிய ஜூடோ சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று அங்கோலா நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார்.

அரசு முறைப் பயணமாக அந்நாட்டுக்குச் சென்றுள்ள அவர் அங்குள்ள இந்திய வம்சாவளியினருடனும் கலந்துரையாட உள்ளார்.

முன்னதாக நேற்று அவர் அங்கோலா அதிபர் திரு ஜோவோ லூரென்கோவுடன் இருதரப்புப் பேச்சு நடத்தினார்.

அதனைத் தொடர்ந்து மீன்வளம் மற்றும் கடல்சார் துறைகளில் இருநாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

<<<<>>>>

*இந்தியாவிலிருந்து கொண்டு செல்லப்பட்ட புத்தரின் புனிதச் சின்னங்களுக்கு அளிக்கப்பட்ட சிறப்பான வரவேற்புக்காக பூடான் அரசுக்கும் அந்நாட்டு மக்களுக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் இந்த நினைவுச் சின்னங்கள் அமைதி, இரக்கம், நல்லிணக்கம் ஆகியவற்றை உணர்த்துவதாக கூறியுள்ளார்.*

*புத்தரின் போதனைகள் இரு நாடுகளின் ஆன்மீகப் பாரம்பரியத்துக்கு இடையேயான இணைப்பாகத் திகழ்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.*

*இதனிடையே இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக நாளை பூடான் செல்லும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்க உள்ளார்.*

*<<<<>>>>*

*காமன்வெல்த் நாடாளுமன்ற சங்கத்தின் 22-வது ஆண்டு மாநாட்டை மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா, கோஹிமாவில் இன்று தொடங்கி வைக்கிறார்.*

*இதில் 8 வடகிழக்கு மாநிலங்களின் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்க உள்ளனர்.*

*இந்த இரண்டு நாள் மாநாட்டில், வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற இலக்கை அடைவதில் சட்டமன்றங்களின் பங்கு குறித்து விவாதிக்கப்பட உள்ளது.*

*நாளை நடைபெறும் நிறைவு விழாவில் மாநிலங்களவை துணைத்தலைவர் திரு ஹரிவன்ஷ் பங்கேற்கவுள்ளார்.*

*<<<<>>>>*

*ஹஜ் புனிதப் பயணம் குறித்து சவுதி அரேபியாவுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.*

*மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக அந்நாட்டுக்குச் சென்ற அவர், அந்நாட்டு அமைச்சர் டாக்டர் Tawfiq bin Fawzan Al-Rabiah உடன் பேச்சு நடத்தினார்.*

*ஒரு லட்சத்து 75 ஆயிரம் பேர் அடுத்த ஆண்டு இந்தியாவில் இருந்து ஹஜ் பயணம் மேற்கொள்ள இந்த சந்திப்பின்போது ஒப்பந்தம் கையெழுத்தானதாகவும், அதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டதாகவும் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.*

<<<<>>>>

*மாலத்தீவில் இந்தியாவின் உதவியுடன் மேம்படுத்தப்பட்ட Hanimaadho சர்வதேச விமான நிலையத்தை அந்நாட்டு அதிபர் திரு. முகமது மொய்சு திறந்து வைத்தார்.*

*இந்நிகழ்ச்சியில் இந்தியா சார்பில் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு பங்கேற்றார்.*

*விமானப் போக்குவரத்தில் இரு நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை மேலும் அதிகரிப்பது குறித்து அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. அப்துல் கலீலுடன் திரு. ராம்மோகன் நாயுடு பேச்சு நடத்தினார்.*

<<<<>>>>

*பொலிவியாவுடனான நல்லுறவை மேலும் வலுபப்டுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு பபித்ரா மார்கெரிட்டா கூறியுள்ளார்.*

*அரசு முறைப் பயணமாக பொலிவியா சென்றுள்ள அவர், அந்நாட்டு அதிபராக பதவியேற்றுள்ள திரு. Rodrigo Paz Pereira-வுக்கு இந்தியாவின் சார்பில் வாழ்த்து தெரிவித்தார்.*

*இரு நாடுகளும் பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படும் என்றும் திரு பபித்ரா மார்கெரிட்டா குறிப்பிட்டுள்ளார்.*

<<<<>>>>

*தொழில் துறையில் லடாக் யூனியன்பிரதேசம் வளர்ச்சி அடைந்து வருவதாக அதன் துணை நிலை ஆளுநர் திரு. கவிந்தர் குப்தா தெரிவித்துள்ளார்.*

*தேசிய தொழில்முனைவோர் தினத்தை முன்னிட்டு லே-யில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், சூரிய மின்சக்தி, சுற்றுலா, கைவினைப்பொருட்கள், இயற்கை விவசாயம் ஆகியவற்றில் லடாக் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டியுள்ளதாக குறிப்பிட்டார்.*

*பெண் தொழில்முனைவோரின் பங்களிப்பு, கைவினைப்பொருட்கள், உணவு பதப்படுத்துதல், டிஜிட்டல் சேவைகள் போன்ற துறைகளில் அதிகரித்து வருவதாக அவர் கூறினார்.*

*கல்லூரி மாணவர்களை தொழில்முனைவோராக மாற்றும் வகையில் புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் திரு. கவிந்தர் குப்தா தெரிவித்தார்.*

<<<<>>>>

நாட்டின் வடகிழக்கு மற்றும் இமயமலைப் பகுதிகளில் நகர்ப்புற வளர்ச்சிக்காக ஆயிரம் கோடி ரூபாய் நிதியம் உருவாக்கப்படும் என்று மத்திய இணையமைச்சர் திரு. **Tokhan Sahu** கூறியுள்ளார்.

புதுதில்லியில் இரண்டு நாட்கள் நடைபெற்ற தேசிய நகர்ப்புற மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சியில் பேசிய அவர், 2030-ம் ஆண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நகர்ப்புறங்கள் 70 சதவீத பங்களிப்பை வழங்கும் என்று கூறினார்.

தூய்மை இந்தியா இயக்கத்தின் மூலம் நகர்ப்புற கழிவு மேலாண்மை திறன் அதிகரித்துள்ளதாக திரு. டோகன் சாஹு குறிப்பிட்டார்.

<<<<>>>>

சண்டிகர் தமிழ்ச் சங்கத்தின் சமூகப் பணிகள் பாராட்டுக்கு உரியவை என்று ஹரியானா ஆளுநர் திரு *Ashim Kumar Ghosh* தெரிவித்துள்ளார்.

சண்டிகரில் நேற்று நடைபெற்ற இந்தச் சங்கத்தின் 55-வது ஆண்டு விழா நிகழ்ச்சியில் பேசிய அவர், 60 ஆண்டுகளுக்கு முன், சண்டிகரில் தமிழர்கள் குடியேறியதாகவும் இந்த நகரத்தை கட்டமைத்ததில் அவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது என்றும் கூறினார்.

கல்வி, சமூகப் பணி, சமூக நல்லிணக்கம் ஆகியவற்றில் சண்டிகர் தமிழ்ச் சங்கத்தின் பங்களிப்பு பாராட்டத்தக்கது என்றும் திரு ஆஷிம் குமார் கோஷ் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தில்லியில் அடுத்த மாதத்திற்குள் மேலும் 187 ஆயுஷ்மான் ஆரோக்கிய மையங்கள் தொடங்கப்படும் என்று தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 168 ஆயுஷ்மான் ஆரோக்கிய மையங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

மக்களுக்கு தரமான சுகாதார சேவைகள் வழங்க முந்தைய ஆம் ஆத்மி அரசு தவறி விட்டதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆயுஷ்மான் ஆரோக்கிய மையங்களில் மேம்பட்ட உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு தரமான சுகாதார சேவைகள் வழங்கப்படுவதாகவும் திருமதி ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாட்டில் அதிக எண்ணிக்கையிலான புத்தொழில் நிறுவனங்களைக் கொண்ட மாநிலமாக மகாராஷ்டிரா திகழ்கிறது என்று அம்மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர ஃபட்னவிஸ் தெரிவித்துள்ளார்.

ஜுஹுவில் மகளிர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்த புத்தொழில் நிறுவனங்களில், *45* சதவீதம் பெண்களால் நடத்தப்படுவதாகக் குறிப்பிட்டார்.

ஐந்து டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற நாட்டின் இலக்கில் மகாராஷ்டிரா முக்கிய பங்கு வகிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் புதிய கொள்கையை வகுக்கப்பட்டுள்ளதாகவும் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் கூறினார்.

<<<<>>>>

அசாமில் தேர்தல் வாக்குறுதிகளை பிஜேபி அரசு நிறைவேற்றியுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு ஹிமந்தா பிஸ்வா சர்மா கூறியுள்ளார்.

குவஹாத்தியில் *5* ஆயிரத்து *500* ஆசிரியர்களுக்கான பணி நியமன ஆணைகளை நேற்று வழங்கி அவர் பேசினார்.

மாநிலத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் ஒரு லட்சத்து *26* ஆயிரம் இளைஞர்களுக்கு அரசுப் பணி வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நேரடி அரசு வேலை வாய்ப்புகளைத் தவிர, தொழில்முனைவுத் திட்டங்கள் மூலம் சுய வேலைவாய்ப்புகளையும் பிஜேபி அரசு உருவாக்கியுள்ளதாக திரு. ஹிமந்தா பிஸ்வா சர்மா கூறினார்.

<<<<>>>>

ஐஐடி-கள் மற்றும் உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்களில் சேரும் அருணாசலப்பிரதேசத்தைச் சேர்ந்த பழங்குடியின மாணவ, மாணவிகளுக்கு *100* சதவீத

ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. பெமா காண்டு கூறியுள்ளார்.

இடாநகரில் கல்லூரி விழா ஒன்றில் பேசிய அவர், ஒவ்வொரு ஆண்டும் விமானம் மற்றும் வணிக கப்பல் ஓட்டும் பயிற்சியில் சேரும் 20 இளைஞர்களுக்கு 75 சதவீத ஊக்கத்தொகையை மாநில அரசு வழங்கும் என்று தெரிவித்தார்.

மாநிலத்தில் இளைஞர்களின் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாகவும் திரு. பெமா காண்டு கூறினார்.

<<<<>>>>

வனப் பகுதிகளில் மக்களையும் வன விலங்குகளையும் பாதுகாக்க ஆந்திர அரசு முன்னுரிமை அளித்து செயல்படுவதாக அம்மாநில துணை முதலமைச்சர் திரு பவன் கல்யாண் கூறியுள்ளார்.

சித்தூர் மாவட்டத்தில் கும்கி யானை பயிற்சி மையத்தை நேற்று திறந்து வைத்துப் பேசிய அவர், காட்டு யானைகளை அவற்றின் வாழ்விடங்களுக்கும் சரணாலயத்திற்கும் பாதுகாப்பாக விரட்ட, பயிற்சி பெற்ற யானைகள் பயன்படுத்தப்படுவதாக கூறினார்.

ஆந்திராவில் வனவிலங்குகள் மற்றும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ஹனுமன் திட்டம் செயல்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த வனத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் வேளாண்துறை அதிகாரிகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் திரு. பவன் கல்யாண் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான ஆசிய ஜூடோ சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

கஜகஸ்தானில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் 70 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் குல்ஷன் குமார் தங்கப் பதக்கம் வென்றார்.

Kapil Parmar, Kokila வெள்ளிப் பதக்கம் வென்றனர்.

*ஆடவர் 95 கிலோ எடைப்பிரிவு மற்றும் குழு பிரிவிலும் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.*

*--------------*

*உலக துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் Anish Bhanwala வெள்ளிப் பதக்கம் வென்றார்.*

*எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 25 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.*

*<<<<>>>>*